1990 மே 9]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சேர். ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய தர்மபுரி மாவட்டத்தில், குறிப்பாக கிருஷ்ணகிரி பகுதியில் நல்ல ருசியுள்ள மாம்பழம் உற்பத்தியானாலும், அதற்குப் பெயர் சேலம் மாம்பழம் என்பது தான்.

இராசிபுரம் நகரின் புறவழிச் சாலை

*2152 திரு. ஏ. சுப்பு :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராசிபுரம் நகரில் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

9-45 மணி

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராசிபுரம் நகரத்தில் புதிய பேருந்து நிலையம் செயல்படத் துவங்கியதும் மிகுந்த நெருக்கடியான நிலையை உண்டாக்கும். ஆகவே ஆத்தூர் சாலையையும், நாமக்கல் சாலையையும் இணைக்கும் புறவழிச் சாலையாவது உடனடியாக ஏற்படுத்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, தற்போது இராசிபுரத்தில் பேருந்து நிலையம், ஆத்தூர்-இராசிபுரம் சாலையிலே அமைந்து இருக்கிறது. இதை ஊருக்கு மத்தியிலே இருக்கிற சந்தைத் திடலில் மாற்ற ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. பேருந்து நிலையம் சந்தைத் திடலுக்குப் போனதற்குப் பிறகு மேலும் போக்குவரத்து நெருக்கடி இருக்குமானால் அது குறித்து பின்னர் முடிவு செய்யலாம். ஏனென்று கேட்டால் அந்த புறவழிச் சாலையை அமைப்பது என்று சொன்னால் அதிகமான தொகை வேண்டி இருக்கிறது. எனவே நிலைமையை முதலிலே பார்த்து பின்னர் முடிவு எடுக்கலாம்.